# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1981/79 - 2016 අගෝස්තු මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.08.25

*1981/79 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.21/1978 (xi)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 91 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2016, ஓகத்து 24.*

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சகாய நிதியக் (திருத்தம்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. 2015, மாச்சு 17 ஆந் திகதிய 1906/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சகாய நிதியக் கட்டளைச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ஆறாம் பந்தியில், அதன் 3 (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியினை இடுவதன் மூலமும் :-

"(அ) ஆணைக்குழுவின் பிரதித் தவிசாளர் ;" ;

(2) பத்தாம் பந்தியில்,-

(அ) அதன் 2 (அ) என்னும் உட்பந்தியின் (i) ஆம் விடயத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :-

" (i) சபையின் தவிசாளராக இருக்கு வேண்டிய ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது அவரது நியமத்தர்;" :

(ஆ) அதன் 2 (ஆ) என்னும் உட்பந்தியின் (ii) ஆம் விடயத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :-

"(ii) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரின் கலந்தாலோசனையுடன், செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களிலிருந்து ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட பொருளியல், முகாமை அல்லது நிதிசார் நிர்வாகம் என்ற துறைகளுள் ஏதேனும் ஒன்றில் நல்ல திறமையை வெளிப்படுத்தியுள்ள நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவர் ;".

*9- 382*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*